ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2123/43 - 2019 මැයි මස 15 වැනි බදාදා - 2019.05.15
*2123/43 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### திருத்தம்

*பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் அமைச்சரவை மேற்கோள்: LA/6/2/92.*
*நகர அபிவிருத்தி அதிகாரசபை இல.: 10/3/590.*

*2013.03.19 ஆந் திகதிய 1802/10 என்னும் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் அப்போதைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது பின்வருமாறு திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ.),*
*பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் திருத்தம்**

*தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், யாழ்ப்பாண மாநகர சபைக்கு உடமையானதும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான காணியினை இன்றிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடமையாக்குகின்றேன்.*

**எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணியின் விபரம்:-**


*வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் கொட்டாய் கிராமத்தில் அமைந்துள்ளதும், பதிவு செய்யப்பட்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் மற்றும் மட்டமிடுநர்*

1A - G 30081 - 12 (2019/05)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திரு. கே. கனகசபை அவர்களினால் 2010.08.24 இல் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 4013/10 இல் காணித்துண்டு இல. 01 என குறிக்கப்பட்டு கண்டி வீதியில் வாடி வீட்டு வளவு என்றழைக்கப் படும் காணியின் விஸ்தீரணம் 31.46 பேர்ச் ஆகும்.

அதன் எல்லைகள் பின்வருமாறு சூழப்பட்டுள்ளது.

வடக்கு: கண்டி பிரதான வீதி; கிழக்கு: பழைய அத்திவாரத்தின் சுவடி; தெற்கு: வீதிக்கான ஒதுக்கீடு; மேற்கு: கடற்கரை வீதி.




| Lot No: | Lachchams | Kulies | Perch | sq. m | Remarks |
|---|---|---|---|---|---|
| 1 | 03 (VC) | 01.70 | 31.46 | 795.75 | Total extent in word Three lachchams VC One point Seven Zero kulies |
| Total | 03 (VC) | 01.70 | 31.46 | 795.75 | Corpous of this plan is covered by the deed No.____ of __________ attested by ________ NP |



05 - 785